# தொலைக்காட்சி தந்த தொல்லைக்காட்சிகள்












**D.A.ஜோசப்**

www.dajoseph.com E-mail : deyeje@yahoo.com

# தொலைக்காட்சி தந்த தொல்லைக்காட்சிகள்

1. மன அலுப்பு தீருவதற்காக மட்டுமே கலைக்காட்சிகள் தேடிய காலம் போய் TV இருக்கிறதே என்பதற்காக பொழுதுபோக்க தொடங்கிவிட்டோம். இதனால் காலவிரயம்

2. மனமகிழ்ச்சி தரும் துய்ப்பு எதுவுமே நம் புண்ணியத்தை குறைக்கும். இதனால் வாழ்வில் பல்வேறு நிலைமைகளில் அடிவிழுகிறது, கஷ்டம் ஏற்படுகிறது.

3. சுக்ராச்சாரியாருடைய கலை எதுவுமே மனிதனை ஈர்க்கும் இதனால் பெரும்பாலானோர்க்கு அடிக்ஸன் ஏற்படுகிறது

4. அக்கம்பக்கம் ஜனங்களோடு பழகும் வாய்ப்பு இல்லை.

5. ஒரே குடும்பத்தினர் தமக்குள் பேசிப்பழகும் நேரம் குறைகிறது.

6. விருந்தோம்பல் மறைந்துவிட்டது.

7. அத்யாவசிய உழைப்பு தவிர முன்னேற்றத்துக்குரிய உழைப்பினை மனம் நாடுவதில்லை.

8. ஆன்மீகத்துக்கு ஒதுக்கப்பட்ட நேரம் இன்று TVக்கு ஒதுக்கப்படுகிறது. இது வீட்டுக்கு நஷ்டம். நாட்டுக்கு நஷ்டம்.

9. அண்ணனின் மனைவியோடு தம்பி உடலுறவு கொள்ளுவது சூழ்நிலைப்படி நியாயம் என்பத போன்ற வக்ரமான கதைகள் சீரியல்களாகத் தோன்றி பெண்கள் உள்ளங்களைக் கெடுக்கின்றன.

10. House wife ஆக இருக்கிறவர்கள் ஸ்ரீராமஜெயம் எழுதுதல், வீட்டை துப்புரவு செய்தல், வீட்டை அழகுபட பராமரித்தல், குடும்பத்தாருடைய சுவைக்கு ஏற்ப சமைத்து வைத்தல் போன்ற தம் கடமைகளில் இருந்து நழுவுகிறார்கள்.

11. தேவையில்லாத விவாகரத்துக்கள், பொருத்தமில்லாத காதல் உறவுகள் அதிகரித்து விட்டன.

12. கண்ணொளி மழுங்குகிறது.

13. ஒரு மாயா நாடகத்தில் மனம் ஈடுபடும்போது அந்த கதாபாத்திரங்கள் அடையும் ஏமாற்றம், துன்பம், அழுகை இவை பார்ப்பவர்களின் உடல், மன நலன்களை பாதிக்கிறது.

14. போதும் என்ற மனம் மாறி, TVயில் காட்டப்படும் ஆடம்பரங்களுக்கு மனம் ஆசைப்பட்டு நியாயமில்லாத வருமானங்களை மனிதன் சேகரிக்கிறான்.

15. சினிமா புரொஜக்டரில் நம் தலைக்குபின்னால் இருந்து ஒளிவந்து அது திரையில் விழுகிறது. ஆனால் TVயில் நம் கண்ணெதிரில் இருந்து ஒளி புறப்படுகிறது, நரம்பு மண்டலத்தை பாதிக்கிறது.

16. குழந்தைகள் Adults only காட்சிகளை பார்த்துவிட்டு வயதுக்கு பொருந்தாத உந்துதல்களை அடைந்து Co-education பள்ளிகளில் கெட்டு போகின்றனர்.

17. உடலாலும் உள்ளத்தாலும் அறிவாலும் வாழ்வின் பல்வேறு கோணங்களில் சாதனை செய்யக்கூடிய இந்த அத்மா ஒரு சிறு அறைக்குள் முடங்கி போகிறது.

18. தீய பொருள்கள் நல்லவைகளாக விளம்பரப்படுத்தப் படுகின்றன.

19. VCD Player-ஐ பயன்படுத்தி நீலப்படங்களைப் பார்த்து வாலிபர்கள் உடலை சிதைத்துக்கொள்கிறார்கள். இன்றைய பெரும்பாலான இளைஞர்கள் மணவாழ்வில் ஆண்மைக்குறைவினால் அவதிப்படுகிறார்கள்.

20. கெட்டிகாரத்தனமான குற்றவியல் காட்சிகளை வில்லனுடைய திறமைக்கு உதாரணமாக காட்டுகிறார்கள். நல்ல மனிதனும் இதனால் பாழாகிறான்.

---

(Article Published on: Saturday, March 03, 2007)

**© All rights Reserved**

For more details contact: D.A.JOSEPH,
No: 18 fourth cross, Rainbow Nagar, Pondicherry, South INDIA.
Website: www.dajoseph.com E-mail: deyeje@yahoo.com Ph: +91 - 0413 - 2210187